விலை: சதம் 75 ★★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஐப்பசி 19 முஹரம் 6 இதழ் 262
யாழ்ப்பாணம் புதன்கிழமை 4-11-1981

# யாழ் தாக்குதல்சம்பவங்கள்: விசாரணை நடைபெறுகிறது

(கொழும்பு)

"யாழ்ப்பாணத்தில் இனிமேல் தாக்குதல் சம்பவங்கள் எதுவும் நடைபெறாமலிருக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அங்கு நடந்த சிலசம்பவங்களையிட்டு கவலையடைகின்றேன். அச்சம்பவங்கள் பற்றி விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது."

ஜனாதிபதி - கூட்டணித் தலைவர்கள் உயர்மட்ட மாநாட்டின்போது, இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் திஸ்ஸ வீரதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அண்மையில் யாழ்ப்பா எடுத்துக் கூறிய போதே, இரா அரசசார்பில் ஜனாதிபதி ணத்தில் நடந்த சில சம்பவங் ணுவ தளபதி மேற்கண்ட ஜே. ஆர். ஜெயவர்த்தனா பிர பற்றி கூட்டணித் தலைவர்கள் வாறு கூறினர். [6-ம் பக்கம் பார்க்க]

## ★ நிதி அமைச்சரின் புதிய வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

# 1982 பட்ஜட்: 2118 கோடி ரூபா

# துண்டு விழுகிறது!

## வருமானம்: ரூபா 1780 கோடி
## செலவு: ரூபா 3899 கோடி

(நமது நிருபர் எஸ் மகாலிங்கசிவம்)

1982ம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளை நிதி,திட்டமிடல் அமைச்சர் திரு ரொனி டி மெல் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்; புதிய 'பட்ஜட்' மதிப்பீடுகளின்படி, மொத்தச் செலவினம் 3899 கோடியே 10 லட்சம் ரூபாவாகவும் வருமானம் 1780 கோடி ரூபாவாகவும் உள்ளது; இதன் மூலம் துண்டுவிழும் தொகை 2118 கோடியே 20 லட்சம் ரூபா ஆகும்.

கடந்த (1981) நிதியாண்டில் மொத்தச்செலவினம் 2852 கோடி ரூபாவாகவும் வருமானம் 1555 கோடி ரூபாவாகவும் துண்டுவிழும் தொகை 1297 கோடி ரூபாவாகவும் இருந்தது.

| | 1981 | 1982 |
|---|---|---|
| மொத்தச் செலவினம் | ரூ. 2852,15,48,195 | ரூ. 3899,10,00,000 |
| மொத்த வருமானம் | ரூ. 1555,02,40,000 | ரூ. 1780,00,00,00 0 |
| துண்டுவிழும் தொகை | ரூ. 1297,13,08,195 | ரூ. 2118,00,20,00,000 |
| நிதிதிட்டமிடல் அமைச்சு | ரூ. 848,67,30,833 | ரூ. 1228,22,58,000 |
| மகாவலி அமைச்சு | ரூ. 303,62,30,000 | ரூ. 669,42,55,000 |
| உணவுகூட்டுறவுத்துறை | ரூ. 172,52,59,510 | ரூ. 172,55,14,000 |
| பாதுகாப்பு அமைச்சு | ரூ. 107,70 06,000 | ரூ. 122,70,47,000 |
| வெளிநாட்டு அமைச்சு | ரூ. 14,79,69,300 | ரூ. 20,35,95,000 |
| ஜனாதிபதி | ரூ. 6,84,92,000 | ரூ. 9,20,48,000 |
| பிரதமர் | ரூ. 18,08,500 | ரூ. 23,37,000 |
| எதிர்க்கட்சித்தலைவர் | ரூ. 5,25,000 | ரூ. 3,50,000 |

1982ம் ஆண்டு 'பட்ஜட்டில்' மகாவலி அபிவிருத்தி அமைச்சுக்கே அதிக அளவு நிதி - இரண்டு மடங்கு - ஒதுக்கப்பட்டுள்ளது.

நிதி, திட்டமிடல் அமைச்சுக்கும் கடந்த வருடத்திலும் பார்க்க சற்றுக் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### ஜனாதிபதி, பிரதமர்

ஜனாதிபதிக்கு கடந்த நிதி வருடத்தில் 6 கோடியே 84 லட்சத்து 92 ஆயிரம் ரூபாவும் எதிர்வரும் நிதி வருடத்தில் 9 கோடியே 20 லட்சத்து 48 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

பிரதமருக்கு கடந்த நிதி ஆண்டில் 13 லட்சத்து 8 ஆயிரத்து 500 ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது எதிர்வரும் நிதி ஆண்டில் 23 லட்சத்து 37 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

### எதிர்க்கட்சித் தலைவர்

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்துக்கு கடந்த பட்ஜட்டில் 5 லட்சத்து 25 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. அடுத்த ஆண்டுக்கான பட்ஜட்டில் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

### பல அமைச்சுக்கள் நிதி குறைவு

நிதி அமைச்சர் நேற்றுத் தாக்கல் செய்த மதிப்பீடுகளில் அதிகமான அமைச்சுகளுக்கு நிதி குறைவாகவே ஒதுக்கப்பட்டுள்ளது.

விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி அமைச்சு, தொழில் அமைச்சு, கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு, கடற்றொழில் அமைச்சு, சுகாதார அமைச்சு, தெங்கு கைத்தொழில் அமைச்சு, பிராந்திய அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றுக்கு குறைந்த அளவு நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது. (ம)

★ யாழ். பல்கலைக்கழக

## கட்டிட வேலைகளுக்கு ரூ. 175 லட்சம் ஒதுக்கீடு

(கொழும்பு)

நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கட்டடவேலைகளுக்கென 175 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் மருத்துவபீடக் கட்டடத்திற்கு 50 லட்சம் ரூபாவும், நூல்நிலையக் கட்டடத்திற்கு 50 லட்சம் ரூபாவும், விஞ்ஞானபீட கட்டடத்திற்கு 40 லட்சம் ரூபாவும் கலைப்பீடக் கட்டடத்திற்கென 35 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (ம)

## படகுகள் கரைசேர்ந்தன! பத்துப் பேர் பலி!

புதுடில்லி, நவ. 3

இந்திய குஜராத், மகாராஷ்டிர மாநிலங்களைத் தாக்கிய பயங்கய சூறாவளியினால் அடித்துச் செல்லப்பட்ட 110 படகுகளும் கரை திரும்பிவிட்டன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரபுக்கடலில் புயலினால் காணாமற்போன பல படகுகளைத் தேடி கண்ணி வெடி அகற்றும் கப்பல்கள் உட்பட பல கடற்படை கப்பல்களும் ஹெலிகொப்டர்களும் ஈடுபட்டுள்ளன.

இப்புயலினால் இதுவரை 10 பேர் மட்டுமே மரணமாகினர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

யாழ். பெரியகடை

## ஜவுளிக்கடையில் 50 ஆயிரம் ரூபா கொள்ளை

யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள ஒரு துணிக்கடையில் நேற்று முன் தினமிரவு சுமார் 50 000 ரூபா பெறுமதியான ஜவுளிகள் திருடப்பட்டுள்ளது!

இதுபற்றி ஜவுளி கடை உரிமையாளர் யாழ்ப்பாணம் பொலிஸில் புகார் செய்ததைத் தொடர்ந்து உதவி இன்ஸ்பெக்டர் திரு. இலங்கசிறி, பொலிஸ்உத்தியோகத்தர் எஸ் இம்ரானுமேல் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்

2ம் திகதி இரவு கடையைப் பூட்டிவிட்டுச் சென்றதாகவும் நேற்றுக்காலை 7 மணிக்குச் சென்று பார்த்தபோது அலுமாரியில் வைக்கப்பட்ட சுமார் 50,000 ரூபா ஜவுளிகள் திருடப்பட்டுள்ளதாகவும் பொலிஸில் உரிமையாளரான கொம்யாத்தோட்டத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளைகுழந்தைவேலு புகார் செய்துள்ளார். [மா-அ]

### வரி ரத்து

[யாழ்ப்பாணம்]

கிரிமலைக்கேணியில் குளிப்பதற்கு இதுவரை காலமும் பொதுமக்களிடமிருந்து அறவிடப்பட்டு வந்த ஒரு ரூபா வரி தற்போது அறவிடப்படுவதில்லை.

### தணிக்கை

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை அமுலில் உள்ளது?

இன்று கோலாகலத் திறப்பு விழா

யாழ்.லலிதா நகைமாளிகை

200, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

இன்று 4-11-81 புதன்கிழமை காலை 7-45 மணிக்கு மேற்குறித்த எமது ஸ்தாபனம் கோலாகலமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்லாதரவை நாடி நிற்கும்
அ. ந. ஆனந்தராசா.

தலைமை நிறுவனம்:
நியூ லலிதா ஜுவல்லர்ஸ்,
74/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

1365

# யாழ்ப்பாணத்தில் தாக்குதல் சம்பவங்கள் நடைபெருது!

## ஜனுதிபதி உறுதியாகக் கூறுகின்ருர்

(கொழும்பு)

"யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்ட சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. மக்கள் எத்தகைய பீதிகொள்ளத் தேவையில்லை."

ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன, நேற்று முன்தினம் தம்மைச் சந்தித்த கொழும்பு வாழ் தமிழ்ப் பிரமுகர்கள் அடங்கிய குழுவிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இளைப்பாறிய நீதியரசர் திரு. வி. மாணிக்கவாசகர் தலைமையிலான குழு ஜனுதிபதியை, ஜனுதிபதி மாளிகையில் சந்தித்து தமிழ் மக்களின் இன்றைய நிலைபற்றி விரிவாக எடுத்துக் கூறினர்கள்.

இக்குழுவில் சட்டத்தரணி ஆர். ஆர். நல்லையா, சட்டத்தரணி டி. எம். சுவாமிநாதன், இளைப்பாறிய நீதியரசர் திரு. வி. சிவசுப்பிரமணியம், திரு. வி. ரங்கநாதன் கியூ. ஸி., திரு. கே. குணரத்தினம், திரு. பி. நவரத்தினராசா கியூ. ஸி. ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

சுமார் மூன்று மணி நேரம் நடந்த இச்சந்திப்பில், இராணுவ தளபதி திரு. திஸ்ஸ வீரதுங்காவும் சமூகமளித்திருந்தார்.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும், இதனுல் மக்கள் அங்கு பீதியுடன் வாழ்வதாகவும் குழுவினர் ஜனுதிபதியிடம் எடுத்துக் கூறி சில சம்பவங்களைப்பற்றியும் விபரித்தனர்.

வடக்கில் வட்டுக்கோட்டை உட்பட நாட்டின் மற்றும் பகுதிகளிலும், தமிழ்மக்கள் தாக்குதலுக்குள்ளாகிவருகிருர்களென்றும் இதனுல் தமிழ் மக்கள் பயத்துடன் வாழ்ந்துகொண்டிருப்பதாகவும் பிரயாணம் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் இக்குழுவினர் ஜனுதிபதியிடம் தெரிவித்தனர்.

குழுவினர்தெரிவித்தவற்றை அக்கறையுடன், கேட்டுக்கொண்ட ஜனுதிபதி சகல துரதிருஷ்ட சில விஷயங்கள் நடந்துவிட்டதாகவும், இதற்காக மனம் வருந்துவதாகவும் ஜனுதிபதி தெரிவித்தார்.

வன்செயல்கள் இனி தலைதூக்கும் என்ற அச்சம் கொள்ள தேவையில்லையென்றும் நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் ஜனுதிபதி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் சில சம்பவங்கள் நடைபெற்றிருப்பதாகவும் அதுபற்றி விசாரணை நடைபெற்று வருவதாகவும் இனிமேல் யாழ்ப்பாணத்தில் தாக்குதல் சம்பவங்கள் நடைபெருமல் இருக்க தகுந்தபாதுகாப்புநடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதாகவும் இராணுவத் தளபதி திரு. திஸ்ஸ வீரதுங்கா தெரிவித்தார். (ம-ர)

## இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 19-ம் திகதி

புதன்கிழமை

(4 - 11 - 81)

மேடம்- எண்ணம்போல் வாழ்வு மலரும் சமூகத்தில் மதிப்பு உயரும் வாகனச்சொந்தக்காரர்களுக்கு முன்னேற்ற முண்டு நண்பர்கள் உதவு வதற்கு முன்வருவார்கள் சாத்தகுணம் சிறப்பைத்தேடித்தரும்.

இடபம்- மகிழ்ச்சிதரும் செய்திசொன்று கிடைக்கக் கூடும் பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர் குடும்பத்தில் உறவு நெருங்கியதாக இருக்கும் அறவழிகளில் நாட்டம் ஏற்படும்.

மிதுனம்- ஆலயவேலைத்தில் காரியங்கள் நடைபெறும் மனைவிகளின் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும் சாணித் தொகையிலும் கடன்படநேரிடலாம் குடும்பத்தில் குழப்ப சலுக்கும் இடமுண்டு.

கடகம்- காதல் விவகாரங்கள் தலைதூக்கும் இனிமையான சம்பவங்கள் இடம்பெறும் கலைத்துறைவழியாகப் பொருள்வரவுக்கும் இடமுண்டு பெரியோர்களின் ஆதரவு கிடைக்கும் கண்ணியமான தினம்.

சிம்மம்- ஏட்டில் சாகல் தாக்கும் எதிர்பாராத விதமாக சிக்கலில் மாட்டிக் கொள்ள நேரிடும் உள்ளக்கிடக்கைகளை எவரிடமும் சொல்லாதிருக்க நிதானம் வேண்டும்.

கன்னி- இரக்கசிந்தை மேலோங்கும் பிறருக்கு உதவுவதில் பெருமகிழ்ச்சியடைவீர்கள் முன்னுள் ஆசிரியர் ஒருவரின் சிபாரிசுக்கடிதம் நல்ல பலனை அளிக்க முடியும் பொதுவாகத் தரமான தினம்.

துலாம்- கடமையாற்றுமிடத்தில் மற்றவர்களின் மதிப்பைப் பெறுவீர்கள் சிலருக்கு வெளிநாடு செல்லும் சந்தர்ப்பம் கிடைக்கலாம் கூட்டுவியாபாரம் சிறந்த பலனைத்தரும்.

விருட்சிகம்- கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும் சிலருக்கும் பதவிஉயர்வு ஏற்படலாம் வெளியிடத் தொடர்புகள்மூலம் செல்வாக்குப் பெருகும் நீண்டநாள் பிணக்கு இன்று நிவர்த்தியாகும்.

தனு- எதிர்பாராத செலவினங்களினுல் பாதிக்கப்படுவீர்கள் கடன் வாங்கவும் நேரிடலாம் சமீபத்தில் நடந்து முடிந்த சம்பவமொன்று மனதிற்கு வேதனையைத் தரலாம் தொழிலிலும் தொல்லையுண்டு.

மகரம்- இன்னலில் பின்னால் இதயம் வேதனைப்படும் வீட்டில் வைத்தியச் செலவு அதிகரிக்கலாம் நண்பர்களுக்கு மத்தியில் அபிப்பிராயபேதம் தோன்றக்கூடும் உணர்ச்சிவசப்படாதிருக்கவும்.

கும்பம்- மனம்நிறைந்த சம்பவங்கள் இடம்பெறும் பெரியவர்களின் ஆசி தாராளமாகக் கிடைக்கும் கைவிட்டுப்போன பணவரவு மீண்டும் கிடைப்பதற்கு இடமுண்டு வீட்டிலும் மகிழ்ச்சியுண்டு.

மீனம்- குடும்பத்தில் சிறுபூசல் தலைதூக்கும் பெரியவர் ஒருவருடன் அபிப்பிராய பேதம் தோன்றக்கூடும் அதிகஉணர்ச்சியால் மோதல்கள் ஏற்படும் அமைதியுடன் இருக்கவும்.

சோதிடக் கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை


பழுதெட்டுக்கு முந்துங்கள்

சிசில் குளிர்சாதனப் பெட்டிகள்

SISIL REFRIGERATORS

- ஒரு வருட தயாரிப்பாளரின் உத்தரவாதம்
- எல்லா உறுப்புக்களும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்
- மிகக்குறைந்த விலையில் ஒருசிறந்த பொருள்
- திருத்துதல், பெயின்ற் அடித்தல்

திறமான முறையில் வெகு விரைவில் நியாயமான செலவில் பயிற்சி பெற்ற வேலையாட்களால் செய்து கொடுக்கப்படும்.

வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்

சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிற்

484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## கொக்குவில் ஐ வி. கழகம் வெற்றி

(கோண்டாவில்)

கொக்குவில் இந்துக்கல்லூரி 1ம் பிரிவு உதைபந்தாட்டக் குழுவுக்கும் கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக்கழகம் 5-1 கோல்களால் வெற்றியீட்டியது.

கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு ராமச்சந்திரன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர். (அ)

## பின்னுறுதிக் கட்டளை

சாவகச்சேரி

மாவட்ட நீதிமன்றத்தில்

சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த பக்கிரிசாமி கோபாலசாமி என்பவரது மரணசாதனமில்லா சொத்துவிடயத்தில்

வசந்தமலர் கோபாலசாமி 'முருகபூபதி', சங்கத்தானை, சாவகச்சேரி.

-மனுதார்

மரணசாதன ] இல. ரீ 196
நியாயாதிக்கம் ]

எதிராக

1. கோபாலசாமி குமணன் ]
2. கோபாலசாமி மைதிலி, ]
3. கோபாலசாமி அகிலன். ]
[பராயமற்றவர்கள்]

4. பஞ்சாயிசேசன் நாகேந்திரம், எல்லோரும் "முருகபூபதி", சங்கத்தானை, சாவகச்சேரி

-எதிர்வாதிகள்

இவ்வழக்கு 1981 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 16 ந் திகதி சாவகச்சேரி மாவட்ட நீதிபதி உயர்திரு. கனகசபாபதி விஸ்வலிங்கம் விக்னேஸ்வரன் முன்னிலையில் மனுதார் சார்பில் அவரின் சட்டத்தரணிகள் "பரராஜசிங்கமும் அம்பிகைபாலனும்" என்னும் நாமத்தில் செயலாற்றும் இருவாளர்கள் முத்தையா பரராஜசிங்கம், செல்லப்பா அம்பிகைபாலன்" அவர்கள் சமூகமாயிருக்க மனுதாரின் மனுவும், சத்தியக் கூற்றும் வாசிக்கப்பட்டு பின்வருமாறு கட்டளையிடப்பட்டுள்ளது.

இக்கட்டளைக்கு மாருன காரணங்கள் ஏதும் 1981 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 25 ந் திகதி அன்று அல்லது அதற்கு முன்பாக குறித்த எதிர்வாதிகளால் அல்லது வேறு அக்கறையுள்ளவர்களால் காட்டப்பட்டாலன்றி மேற்குறித்த காலஞ்சென்ற பக்கிரிசாமி கோபாலசாமி மரணச் சொத்துகளுக்கு அவரின் மனைவியாரான குறித்த மனுதார் நிருவாகத்ததிகாரியாக நியமிக்கப்படுவார்.

மேலும் இக்கட்டளைக்கு மாருன காரணங்கள் ஏதும் 1981-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 25-ந் திகதி அன்று அல்லது அதற்கு முன்பாக குறித்த 1-ம், 2-ம், 3-ம் எதிர்வாதிகளால் அல்லது அக்கறையுள்ள வேறு எவராலும் காட்டப்பட்டாலன்றி மேற்குறித்த 4-ம் எதிர்வாதி இவ்வழக்கிடையமாக பராயமற்ற 1-ம், 2-ம், 3-ம் எதிர்வாதிகளின் வழக்குக் காவலராக இத்தால் நியமிக்கப்படுவார்.

1981-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 16-ந் திகதி.

ஒப்பம்
க. வி. விக்னேஸ்வரன்
மாவட்ட நீதிபதி

தயாரித்தவர்கள்
பரராஜசிங்கமும்
அம்பிகைபாலனும்
மனுதாரின்
சட்டத்தரணிகள். 1356

## நிர்வாகிகள்

(புலோலி)

புலோலி பலநோக்கு கூட்டுறவுச்சங்க ஊழியர்களின் கிளைக்குழு உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் வ. தம்பிராசா, உபதலைவர் கே. பி. சுவாமிநாதன், செயலாளர் எம். கே. சண்முகநாதன், நிர்வாகசபை உறுப்பினர்களாக இ. கிருஷ்ணராசா, கு சிவராசா, வ. கோபாலகிருஷ்ணன், வே. தருமலிங்கம், ப சிவலிங்கம், க. கந்தசாமி.

## கரபந்தாட்ட சாம்பியன்

(மல்லாகம்)

முருகன் இளைஞர் முன்னேற்றக்கழகம் மக்கள் வங்கி வெற்றிக் கேடயத்திற்காக நடத்தப்பட்ட இரண்டாவது கரபந்தாட்ட சுற்றுப்போட்டியில் மல்லாகம் ஆத்திகுறிப்பு ஜின்னு விளையாட்டுக்கழகம் சம்பியனுகத் தெரிவு செய்யப்பட்டது.

இக்கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் மல்லாகம்-செம்மண் தீவு நீர்ப்பாசன இலாகா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இறுதி ஆட்டத்தில் ஆத்திகுறிப்பு ஜின்னு விளையாட்டுக் கழகம் கோண்டாவில் ஹம்தியா விளையாட்டுக்கழகத்தைத் தோற்கடித்து சம்பியனுகத் தெரிவுசெய்யப்பட்டது.

மல்லாகம் மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு பி எம் செல்லதுரை கேடயத்தை வழங்கினுர். (அ)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

250 சதுர அடி தேக்குமரம் விற்பனைக்கு உண்டு. 5 அடி சுற்றளவுக்கு மேற்பட்ட மரங்களும் உண்டு. விரும்பியவர்கள் நவம்பர் 15-க்கு முன் தொடர்புகொள்ளவும் வே. மாணிக்கசோதி, விநாயக முதலியார் தெரு, வட இந்து மகளிர் பாடசாலைக்கு அண்மையில், பருத்தித்துறை. 1346

பிரபல ஆசிரியர்களின் ஆங்கில தமிழ் நாவல்கள் விற்பனைக்குண்டு. பிரத்தியேக சேகரிப்பு தொடர்புகொள்க. பாலசுப்பிரமணியம் 144/3, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். 1357

மினிபஸ்கள், லொறிகள், கார்கள் போன்ற ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சகல வாகனங்களுக்கும் மூன், பின் கண்ணுடிகளும் மற்றும் சகலவிதமான உதிரிப்பாகங்களும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய இடம், லிவி மோட்டோர் ஸ்ரோஸ், 153 1/6, பஞ்சிகாவத்தைறோட், கொழும்பு-10, தொலைபேசி: 34467 1361

நல்ல நிலையிலுள்ள 2 ஸ்ரீ போக்ஸ்வொகன் கார் ஒன்று விற்பனைக்குண்டு. 82, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். 1362

## கண்டனம்

(யாழ்ப்பாணம்)

"நாட்டின் பல்வேறு பகுதிகளில் வகுப்புவாதத்தின் பெயரால் பல்வேறு விதத்திலான துன்புறுத்தல், உடைமைகளுக்குச் சேதம் விளைவித்தல் போன்ற பயங்கரவாத நடவடிக்கைகளைப் பற்றிச் செய்தி கிடைக்க ஆரம்பித்துள்ளது. வடக்கில் இராணுவ வீரர்கள் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு ஆளாகி உயிர் இழந்ததும், அதனை உபயோகித்து வடக்கில் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக இராணுவ வீரர்களால் மேற்கொள்ளப்படும் தாக்குதல் சம்பவங்களைப் பற்றி செய்திப் பத்திரிகைகளில் அநேக தகவல்கள் வெளியாகியுள்ளன. இராணுவ வீரர்களைச் சுட்டவர்களைத் தேடிப்பிடிப்பதற்குப் பதிலாக, தமிழ் மக்களை அடக்குமுறைக்கு உள்ளாக்குவது, அம்மக்கள் பகுதியினரை மேலும் சிங்கள மக்களிடமிருந்து தூரத் தள்ளிவைப்பதற்கு காரணமாக அமையும். இது தமிழ், சிங்கள ஐக்கியத்தையும், ஒற்றுமையையும் கட்டியெழுப்புவதற்கு மிகப்பெரிய முட்டுக்கட்டையாகும்"

மக்கள் விடுதலை முன்னணி உதவி செயலாளர் திரு லயனல் போபகே விடுத்துள்ள அறிக்கையொன்றில் இவ்வாறு கூறியுள்ளார்.

எப்பகுதியினரை சார்ந்தோரினுல் மேற்கொள்ளப்பட்டாலும், நாம் இனவாத வன்முறை நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிக்கிறோம். இச்செயல்கள் கஷ்டப்படும் மக்களின் நலனுக்கு எதிரானதுடன், முதலாளித்துவ வர்க்கத்துக்கே சேவைசெய்யும். இதனுல் தமது பிரதேசங்களில் வாழும் பெரும்பான்மை மக்களின் மொழியை மக்கள் பகுதியினரை பாதுகாப்பது இந்நாட்டு உழைக்கும் மக்களுக்கு உரித்தான கடமையாகும். எனவே இவ்வினத்துவேஷக் கடமையைப் பற்றி விழிப்பாகவும் அவதானமாகவும் இருக்குமாறும், இனவாத வன்முறையைத் தடுப்பதற்கு ஸ்தாபனரீதியாக ஒன்றுதிரளுமாறும் மக்கள் விடுதலை முன்னணி இந்நாட்டு உழைக்கும் மக்களிடம் வேண்டுகோள் விடுக்கிறது என திரு. போபகே கூறியுள்ளார்

### மணிவாக்கு

பட்டும் படாததுமாக பக்தி பண்ணிக் கடவுளை அடைவார்களென்பது அசாத்தியம்.

—ஸ்ரீராமகிருஷ்ணர்

# நமது நோக்கு

## மாநில ஆட்சியும் மத்திய அரசும்

மாநில அரசாங்கங்களுக்குக் கூடிய சுய நிர்வாக உரிமை வழங்கப்படவேண்டுமென்று இந்திய ஜனாதிபதி திரு நீலம் சஞ்சீவரெட்டி கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

தேசத்தலைவர் என்ற முறையில் அவர் இவ்விதம் கருத்து வெளியிட்டிருக்கக் கூடாதென்று ஆளுங்காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

இந்திய ஜனாதிபதிக்கு அமெரிக்க ஜனாதிபதியின் நிர்வாக அதிகாரங்கள் இல்லாத போதும், அவர் இந்தியப் பிரதமரின் கைப்பொம்மையல்லவென்பது அரசியலமைப்பு தெளிவுபடுத்துகின்றது. அவர் மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட தலைவர்.

அத்தகைய தேசத்தலைவர் தேசத்தின் மூலாதார பிரச்னைகளில் மௌனம் சாதிப்பது அவருடைய ஆளுமைக்கு முரணானது. சமத்துவ நோக்குடன் சீர்தூக்கிப் பார்க்கும் ஆற்றல் பெற்ற தேசத்தலைவரின் கருத்து நாட்டின் தலைவர்கள் அனைவரின் சிந்தனைக்குரியது.

இந்தியா ஒரு நாடல்ல; ஒரு தேசமென்றும் சொல்வது பொருத்தமல்ல; ரஷ்யாவை ஐரோப்பாவிலிருந்து நீக்கிப் பார்த்தால் இந்தியா ஐரோப்பாவிலும் பெரியது; அது ஒரு உபகண்டம் என்பது ஒப்புக் கொள்ளப்பட்டது.

அந்நிய ஆட்சியை அகற்ற ஒன்றுபட்ட பல நாடுகளே இந்திய உபகண்டம்; பண்பாட்டில் அது ஒருமைப்பட்டது; ஆனால் சுதந்திர வாழ்வில் ஒவ்வொரு இந்தியப் பிரஜையும் விடுதலையின் பயனை அடையவேண்டுமானால் மத்திய அரசில் அதிகாரம் குவிந்து கிடப்பது நல்லதல்ல. மாநிலங்கள் அதிகாரங்களை மத்திய அரசிடமிருந்து பெறவேண்டும்.

இந்தநிலை வளர்ச்சியடையாவிட்டால், இந்தியா இலங்கையைப் போன்று மாநில ஆட்சி மாவட்ட அபிவிருத்திச்சபையின் அந்தஸ்துக்கு இறங்கிவிடுவது இயல்பு.

எந்த ஒரு சிறுகாரியமானாலும் உதாரணமாக தொழில்செல்வநிதிஉதவி போன்ற விடயங்களுக்கு டில்லியை எதிர்பார்த்து நிற்கும் ஏளனநிலை மாறவேண்டும். ஒரே பொருளுக்கு உற்பத்தியில் மாநில வித்தியாசமிருந்தால் டில்லி பாகுபாடற்ற விலையை நிர்ணயிக்க உரிமை உண்டு. இது மாநில உற்பத்தியை பாதிக்கின்றது. விளைவு மாநில சாதனையல்ல வேதனையாகும்.

அண்மையில் இந்தியப் பிரதமர் மாநில ஆட்சியின் சாதனைகளை பரிசீலனை செய்ய எடுத்த திடீர் விஜயங்கள் மத்திய அரசின் ஆதிக்கத்தை உறுதிப்படுத்தியதல்லாமல் மாநில அரசின் பலவீனத்தையும் பகிரங்கமாக்கியது.

ஆளுங் காங்கிரஸ் ஆட்சியல்லாத மாநில அரசான் கொடுக்கும் தொல்லைகள் இந்தியப் பிரதமருக்கு கரையற்றவட்டம் பல விவகாரங்கள் அவருக்குப் பரிகாசம் போல் தோன்றுகின்றன. சீக்கியர் சட்ட விரோதமான தனிநாடு கோரும் இயக்கத்தில் ஈடுபட்டு 'காலிஸ்தான்' கேட்கின்றனர். அஸாம் போன்ற இவற்றையெல்லாம் ஆதாரமாகக்கொண்டு பாரதத்தின் ஒருமைப் பாட்டைக் குலைக்கும் எந்தக்கோரிக்கைக்கும் இடமளிக்காத வகையில் அரசியலமைப்பு மாநிலஆட்சிக்கு எல்லை வரைந்து கட்டியிருக்கிறது.

இந்தக் கட்டுப்பாட்டினைச் செயற்படுத்தும் பிரதமரோ வீராங்கனைவேகத்தில் எதற்கும் இலகுவில் இளகாத பேர்வழி.

ஒவ்வொரு மாநிலமும் ஒரு பெரிய நாடென்பதை நாம் மேலே குறிப்பிட்டோம்; இவற்றின் அபிவிருத்திக்குரிய திட்டங்கள் ஏராளமானவை; இவற்றின் கலாச்சாரம், மொழி, பண்பாடு ஆகியவை சிந்தாமல் சிதறாமல் தக்க பாதுகாப்போடு கட்டிக்காக்கும் மாநில உரிமை நிச்சயம் பேணப்படவேண்டும். இந்த உரிமை செயற்படும்போது தேசத்தின் ஒருமைப்பாட்டுக்குத் தீங்கு விளையாத அளவில் பாதுகாக்கும் பொறுப்பு மத்திய அரசுக்கு என்றும் உண்டு.

இந்த நியாயமான கோரிக்கையை இந்திய ஜனாதிபதி எழுப்பியிருப்பது அதற்கு மதிப்பளிக்கின்றது.

அவருடைய கருத்தை விபரிப்பதானால், மத்திய அரசாங்கத்தில் அதிகாரங்கள் குவிந்து கிடக்கும்வரை மத்திய ஆட்சிக்கு அது தொல்லையாக அமைந்திருக்குமே தவிர துணையாக இருக்காது என்பதாம்.

இலங்கை ஒரு சிறிய நாடாக இருந்தாலும், கலாச்சாரம், மொழி, பண்பாடு ஆகிய அடிப்படை உரிமைகளைக் கொண்ட இந்நாட்டின் தேசிய இனமான தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களுக்கு இவ்வித திருத்தியமைக்கப்பட்ட மாநில ஆட்சி நாட்டின் ஒருமைப்பாட்டைப் பலப்படுத்தக்கூடியது.

எந்தவகையிற் பார்த்தாலும் மாநில சுயாட்சி அதிகாரங்கள் கொண்ட, பலமுற்ற, மக்களைக் கவனிக்கின்ற, உணர்வுற்ற ஆட்சியாக வேண்டும்.

### நினைவு தினம்

(மட்டுவில்)

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தின் ஸ்தாபகரான முத்து உபாத்தியாயரட நினைவு தினம் மேற்படி பாடசாலை அதிபர் திரு. ஆ. செல்லையா தலைமையில் கொண்டாடப்பட்டது.

இளைப்பாறிய வித்தியாலய அதிபர் திரு. வி. படைவீரசிங்கம் நினைவுச் சொற்பொழிவாற்றினார். (மா)

### உலகின் இன்றைய தேவை

# அபிவிருத்தியா ஆயுத உற்பத்தியா?

முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகள் இன்று போட்டா போட்டி போட்டுக் கொண்டு ஆயுதங்களை உற்பத்தி செய்து வருவதனையும் அதே நேரம் ஏனைய வளர்ந்து வரும் நாடுகள் என்றுமில்லாதவாறு பஞ்சம், வறுமை, போஷாக்கின்மை வேலையின்மை போன்றவற்றினால் பாதிப்படைந்த நிலையினை எதிர்நோக்கி வருவதனையும் காண்கிறோம். இதனால் அபிவிருத்திக்கும ஆயுத உற்பத்திக்குமான இவை வெளியானது மிகமிக அதிகமாகிக் கொண்டே வருகின்றது. நாடுகளுக்கிடையிலேயும் வல்லரசுகளுக்கிடையிலேயும் சமாதானப் பேச்சுவார்த்தைகளும், ஆயுத உற்பத்தி விற்பனைக் கட்டுப்பாடுகள் சம்பந்தமான பேச்சுவார்த்தைகளும் நடைபெற்றுவருவதனை நோக்கும் போது ஒருகுறிப்பிட்ட நிலையிலேதுஉலகம்முழுவதும்ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் அமைதியாகவும் வாழலாம் என்று நாம் நினைத்தும் பார்க்க முடியாமலிருக்கிறது.

இந்த ஆபத்தான நிலையினில் இருந்து மீட்சி பெற வேண்டுமானால் உலக நாடுகள் ஆயுத உற்பத்தியில் இருக்கும் கவனத்தை அபிவிருத்தி ஆக்கப்பணிக்குச் செலுத்துதல் வேண்டும். ஏனெனில் உலக நாடுகள் பெருமளவு பணத்தை அபிவிருத்தித்துறை வேண்டி நிற்க அதை தவிர்த்து இராணுவ தேவைக்கு யுத்த தள

சி. ரகுலேந்திரன்

பாட உற்பத்திக்கு பயன்படுத்தி வருவது மிகவும் கவலையளிக்கக் கூடிய ஒரு விடயமாகும்.

உலக நாடுகளினது வருடாந்த இராணுவச் செலவானது கிட்டத்தட்ட 450 மில்லியன் டொலர்களாகும். அதே நேரம் அபிவிருத்திக்கு உதவியாக வழங்கப்பட்ட தொகையானது இத்தொகையினில் 5 வீதத்துக்குக் குறைவாகவே தான் இருக்கின்றது. இவ் இராணுவச் செலவினங்களாவன அவை பெருமளவு அபிவிருத்திக்குப் பாதிப்பினையே ஏற்படுத்துகின்றன.

உலகின் பல நாடுகளில் பல இலட்சக்கணக்கான மக்கள் மலேரியா நோயினால் பெரிதும் பாதிப்படைந்து வருகின்றார்கள் இந்த மலேரியா நோயினை ஒழித்துக்கட்டுவதற்கு உலக சுகாதார நிறுவனம் ஓர் திட்டத்தினை வகுத்துள்ளது. போதிய நிதிப்பற்றாக்குறையின் காரணத்தினால் இதனை பூரணமாக அமுல் செய்ய முடியவில்லை. மேற்கூறிய வருடாந்த இராணுவச் செலவின் அரை நாளுக்கான செலவு இந்த மலேரியா ஒழிப்புத் திட்டத்தின் பூரணமாகச் செயற்படுத்துவதற்கு போதுமானவையாகும். எனவே உலக நாடுகள் அனைத்தும் இதனை செயற்படுவதற்கு தமது இராணுவ செலவினத்தை குறைப்பதற்கு

(6-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### நல்லூர் சந்தையைக் காப்பாற்றுங்கள்

நல்லூர் சந்தை, கல்வியங்காடுச் சந்தை, கைதோளிச் சந்தையென யாழ். மாநகரசபையினரால், ஒரு சிறிய பெயர் பலகைதானும் பொறிக்கப்படாத முறையால், செங்குந்தர் சந்தையெனப் பதிவுப் பெயருடைய இச் சந்தை பொதுமக்களால் பலவாறாக அழைக்கப்படுகிறது இச்சந்தை 1981ம் ஆண்டு யாழ். பெரிய கடைச் சந்தைக்கு அடுத்ததாக எழுபத்து ஓராயிரத்து முன்னூற்று ஐம்பத்து ஒரு ரூபா பதினொரு சதத்தை எமது யாழ் மாநகரசபைக்கு ஈட்டிக் கொடுத்துள்ளது. ஆனால் இச்சந்தையின் பராமரிப்பு படுமோசமாகவிருக்கிறது. காலை ஆறு மணி தொடக்கம் இரவு எட்டு மணி வரை கூடியிருக்கும் இச் சந்தைக்கு நாளொன்றுக்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்துபோகிறார்கள். ஆனால் இங்கு வருபவர்களுக்கு சிறு நீர் கழிப்பதற்குதானும் ஒரு கூடமில்லாதிருப்பது மிகவும் கவலைக்குரியது. இங்கு அமைந்து கொண்டிருக்கும் கோப்பாய் கோமான் வன்னியசிங்கம் படிப்பகமும் மீன்சந்தைப் பக்கமும் மழைநீராலும் புதர் செடிகளுடன் மண்டிக்கிடக்கிறது. ஐந்தாம் வகுப்புவரையுள்ள பாசிப்பிள்ளை வித்தியாலயத்திற்கு செல்லும் சின்னஞ் சிறார்கள் இவற்றையெல்லாம் தாண்டியே செல்லவேண்டியுள்ளது.

பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடையென்றிராது வருடா வருடம் சுகாதார விழாவிற்கு மாநகரசபை செலவு செய்யும் பணத்தையாவது செலவு செய்து உடனடியாக சந்தையிலுள்ள புல் புதர்களை வெட்டி வெள்ளக்கிடங்குகளை மூடி, நுளம்புப் பண்ணையின் ஆரம்பத்தினை தடுத்தாட்கொள்ளுமாறு இதற்குப் பொறுப்பான யாழ் மாநகர சபையினரை வேண்டிக்கொள்கிறேன்.

க. சி. இராஜேஸ்வரன்
ஆடியபாதவீதி,
நல்லூர்

### காரைநகரில்

## காப்பிய நாயகிக்கோர் கலைக்கோயில்

சோழவளநாட்டிலே அவதரித்து, பாண்டிய நாட்டிலே மதுரையம்பதியினில் நீதியை நிலைநாட்ட வழக்குரைத்து சேரநாடு புகுந்து வானுறையும் தெய்வமாகிய காப்பியத் தலைவி கண்ணகிதேவி தமிழ் கூறும் நல்லுலகெங்கணுமே கோயில் கொண்டாள் என்பது வரலாறு. இவ்வாறே நமது ஈழமணித் திருநாட்டில் பல இடங்களில் தெய்வக்கண்ணகியாக காட்சி கொடுக்கும் நம் அன்னை காரைநகரின் கிழக்கு திசையிலே, ஊர் வாசலிலே காட்சி கொடுப்பது கண்ணகை அம்மனாக வதிருப்பணியில் உள்ளதுபோல் இங்கேயும் கிழக்கு நோக்கியிருக்கும் கண்ணகை முற்றத்திலே இங்கேயும் பல அற்புதங்களை காட்டியதாக கூறுவர். இக்கோவிலின் முன்னால் கடல் உள்ளதால் முற்காலத்தில் இங்கேயும் உப்பு நீரில் திருவிளக்கு எரிந்ததாயும் இரவு நேரங்களில் வெண்ணிற ஆடைதரித்துக்கண்ணகை உலவி வந்ததாயும் இன்றும் இங்கே சுற்றுடலில் உள்ளமக்கள்கூறுவர்.

இப்புதுமை வாய்ந்தகோவில் சில காலமாக எதுவித பூசைகளும் இல்லாமல் இருப்பது கண்டு இவ்வூர் மக்கள் இக்கோவிலைப் பொறுப்பேற்று இதற்கென ஒரு தர்மகர்த்தா சபையும் அமைத்து, நித்திய பூசைகளை செவ்வனே நடாத்தி வந்துள்ளார்கள். இப்போது திருவருள் கூட்ட கண்ணகியின் அருளும் கிடைக்கப்பெற, வேத சிவாகம முறைப்படி அமையாத இக்கோவிலையும், விக்கிரகத்தையும் புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்யும் நோக்குடன், முத்தமிழ் செல்விக்கு ஓர் கலைக் கோவிலாகவும், அன்னை இராஜராஜேஸ்வரியையும் பிரதிஷ்டை செய்யவும் இன்று புதன்கிழமை காலை 7மணிக்கு அடிக்கல் நாட்ட முன்வந்துள்ளார்கள். இப்பணியானது செவ்வான நடந்தேறி காப்பியத் தலைவியின் குடமுழுக்கு விழாவில் பல அடியார்கள் கலந்துகொள்ள எல்லாம்வல்ல இறையருள் கருணை செய்யவேண்டுமென பிரார்த்திக்கிறோம்.

அ.நா. குழந்தைவேலு
(இணைச்செயலாளர் வலந்தலை அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலய பொறுப்புரிமைச்சபை)

### கண்ணதாசன்

காவியத்தில் பூத்த முத்து
ஓவியமாய் உயர்ந்த சொத்து
சீவியமே கவிதை யாத்து
ஜெகம்புகழ வாழ்ந்த முத்து!

காலத்தால் அழியாதவன்
ஏலத்தால் மலியாதவன்
வாழத்தான் தெரியாதவன்
ஞாலத்தில் (ஒரு) மகா கவிஞன்!

காலங்களில் அவன் வசந்தம்
கலைகளிலே அவன் காவியம்
கவிஞர்களில் அவன் கவித்திலகம்
கன்னித்தமிழுக்கு அவன் வசந்தம்!

கண்ணனின் தாசனாய்-புவியில்
காவியத் தலைவனாய்-கவி
மன்னனாய் காலத்தை வென்றான்
ஞாலத்தில் நீங்கா புகழ்கொண்டான்!

-சொ. ஞானலிங்கம்

## சைக்கிள் திருட்டு
## 6 மாத கடூழியமும் 250 ரூபா அபராதமும்

(யாழ்ப்பாணம்)

திருட்டுச் சைக்கிளுடன் பிடிபட்டவருக்கு 6 மாதகாலக் கடூழியச் சிறைத்தண்டனையும் 250 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

இவ் வழக்கு யாழ் நீதவான் ஆ. யோகராசா முன்னிலையில் வைக்கப்பட்ட சிறைத்தண்டனை தோற்ற விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ் வழக்கில் கொக்குவில் பைசிக்கிளைச் சேர்ந்த ஆர். யோகச்சந்திரம் என்பவர் சைக்கிள் ஒன்றை திருடியதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

குற்றவாளியாகக் காணப்பட்ட எதிரிக்கு 5 வருடம் ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. (மா-உ)

## “உனக்குமுன்னால் பிரேமனை கொல்லுகின்றோம்”
### இவ்விதம் கூறி வெட்டியதாக மரணவிசாரணையில் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

“உன்னை கொலை செய்யமாட்டோம்; உனக்கு முன்னால் பிரேமனைக் கொல்லுகின்றோம் பார்” என்று சொல்லிவிட்டு இருவரும் ஓடிப்போய் பிரேமனைப் பிடித்தார்கள் என்று யாழ் கே. கே. எஸ் வீதியில் உள்ள ஒரு ‘கிளப்’பில் வெட்டிக் கொலை செய்யப்பட்ட நடேச பிரேமன் என்பவரின் மரண விசாரணையின் சாட்சியமளிக்கையில் இச் சம்பவத்தின்போது காயமடைந்தவரான திரவியம் ராசேந்திரம் என்பவர் கூறினர்.

யாழ். ஆஸ்பத்திரியில் பதில் நீதவான் திரு. என். அமிர்தலிங்கம் மரணவிசாரணை நடத்தினர். மரணவிசாரணையில் திரவியம் ராசேந்திரம் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

காலஞ்சென்ற நடேசு பிரேமன் எனது ஒன்றுவிட்ட அண்ணன். பக்கத்து வீட்டில் வசிப்பவர். பிரேமன் என்று அழைப்பது வழக்கம். இவருக்கு 3 பிள்ளைகள் உண்டு. அன்று இரவு 12 மணியளவில் பிரேமன் வீட்டில் கதைத்துக் கொண்டு நின்றபொழுது சிகரட் வாங்க என்னைக் கூப்பிட்டார். பின் சிகரட் வாங்க ஆரியகுளம் சந்திக்கு வந்த பொழுது எங்களுக்கு முன்னால் டாக்ஸி ஒன்று வந்து நின்றது. இக்காரிலிருந்து யோகா, வெள்ளையன், விஜயன் ஆகிய மூவரும் இறங்கி காலஞ்சென்ற பிரேமனுடன் கதைத்தார்கள்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## சங்கிலி அறுக்க முயன்ற இளைஞர்

(சித்தன்கேணி)

கோவிலிருந்து வீடு திரும்பிய பெண் ஒருவரின் சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓட முயன்ற இளைஞர் ஒருவரைக் கையும் மெய்யுமாகப் பிடித்த ஊர்மக்கள் அந்நபரை நையப் புடைத்தனர்.

சித்தன்கேணி பிள்ளையார் கோவிலிருந்து வீடு திரும்பிய பெண் ஒருவரிடமிருந்தே அவர் வீட்டு வாசலில் வைத்து இளைஞர் ஒருவர் சங்கிலியைப் பறிக்க முயன்றுள்ளார்.

ஊர்ப்பிரமுகர்களிடம் மன்னிப்புக் கேட்ட பின்னர் இளைஞர் விடுவிக்கப்பட்டார்.


# ஹோம்பினன்ஸ்லிமிட்டெட்

82, கன்னாதிட்டி ரோட்,
யாழ்ப்பாணம்.
போன்; 8310

மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

## உல்லாச பஸ் சேவை

யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம்
3-11-81ம்திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம்

டிக்கெட் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பினன்ஸ் லிமிட்
82, கன்னாதிட்டி ரோட், யாழ்ப்பாணம்.
(தொலைபேசி: 8310)

(2) யாழ்.மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல 6. நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7596

புறப்படும் நேரம் மாலை 6-00 மணி

செல்லும் தினங்கள்
செவ்வாய், வியாழன், ஞாயிறு

கொழும்பிலிருந்து திரும்பும் தினங்கள்
திங்கள், புதன், வெள்ளி

# ஹோம் பினன்ஸ்
லிமிட்டெட்
463, காலி ரோட், கொழும்பு.
போன்: 89190


## அபிவிருத்தியா...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

முன்வருமா என்பது கேள்விக் குறியாவே இருக்கும்.

### ஒரு டாங்கியின் செலவு

தற்போதைய ஒரு நவீன டாங்கியினது செலவானது கிட்டத்தட்ட 1 மில்லியன் (10 லட்சம்) டொலராகும். இத்தொகையினைப் பயன்படுத்தி 1 லட்சம் தொன் அரிசியினை சேமித்து வைக்கும் களஞ்சிய வசதியினை ஏற்படுத்திக் கொள்ளலாம். இதன் மூலம் வருடாந்தம் 4000 தொன் அல்லது அதற்குக் கூடுதலான தொகையினை மீதமாகச் சேமிக்கலாம். சராசரி ஒரு மனிதன் ஒரு நாளைக்கு ஒரு றாத்தல் அரிசியினைக் கொண்டு உயிர்வாழக்கூடியதாக இருக்கும். எனவே இதன் மூலம் பல லட்சக்கணக்கான மக்களுக்கு பஞ்சத்திலிருந்தும் நிவாரணமளிக்கலாம்.

கல்வியறிவின்மையானது உலகின் வறுமைக்கு முக்கிய காரணங்களில் ஒன்றாகும். கல்வி அபிவிருத்தியிலேயே ஒரு நாட்டினது முன்னேற்றமும் தங்கி இருக்கின்றது மேலே கூறிய ஒரு நவீன டாங்கிக்கான செலவினத்தைப் பயன்படுத்தி 1000 வகுப்பறைகளைக் கொண்ட கல்விக் கூடங்களை அமைத்து அதில் 300.00 பிள்ளைகள் கல்வி வசதிகள் பெறும் சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக்கொள்ளலாம். எனவே ஒவ்வோர் நவீன டாங்கியும் பல லட்சக்கணக்கான மக்களினது வாழ்க்கையினையும் கல்வியறிவு பெறுகின்ற சந்தர்ப்பத்தினையும் அவர்களினது முன்னேற்றத்தினையும் தவிர்த்தே உற்பத்தி செய்யப்படுகின்றது என்பது மனவருந்தத்திற்குரிய விடயமாகும்.

### சுகாதாரம்

மனித வாழ்க்கைக்கு சுகாதாரம் மிகமுக்கியமானதாகும். மருத்துவ வசதியின்மையினால் தொற்று நோய்களும், சிசு மரணங்களும், இறப்பு வீத அதிகரிப்பும் ஏற்படுகின்றன. பின்தங்கிய நாடுகளினது முன்னேற்றத்திற்கு சுகாதார சீர்கேடு ஒரு பெரும் முட்டுக்கட்டையாக விளங்குகின்றது

ஒரு நவீன ஜெட் யுத்த விமானத்தின் விலையான 20 மில்லியன் டொலராகும். (200 லட்சம்) மருத்துவ வசதியின்மையினால் மிகமோசமாக பாதிப்படைந்திருக்கும் 4000 கிராமங்களுக்கு இத்தொகையினைப் பயன்படுத்தி மருத்துவ வைத்திய வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளலாம். ஒவ்வோர் நவீன ஜெட் விமானங்களும் 40000 கிராமங்களினது அபிவிருத்தியினைத் தவிர்த்து, பல லட்சக்கணக்கான மக்களையும் அவர்களினது உடைமைகளையும் அழிப்பதற்கென்றே உருவாக்கப்படுவதினை நினைத்துப் பார்க்கும்போது மனிதத்தன்மை எப்போது பூரணத்துவப்படும் என்று சிந்திக்க வேண்டியுள்ளது

போதிய மூலதன வசதியின்மை; தொழில்நுட்ப அறிவின்மை; இயந்திரப்பயன்பாடு இன்மை போன்ற பல காரணங்களினால் பின்தங்கிய நாடுகள் தமது மூலவளங்களைச் சரிவரப் பயன்படுத்தி உணவு உற்பத்தியினை பெருக்க முடியவில்லை. உலக நாடுகளின் இராணுவச் செலவின் ஒரு கிழமை (?) ஒரு சதவீதத்தின் அரைப்பங்கினை இந்த உணவுப் பற்றாக்குறை நாடுகளுக்கு விவசாய அபிவிருத்திக்கு உபகரணங்களை வழங்குவதன் மூலம் உணவுப்பற்றாக்குறையாக உள்ள நாடுகள் 1990ம் ஆண்டளவில் தன்னிறைவு காணக் கூடியதாக இருக்கும்.

எனவே மேற்கூறிய தகவல்களை மனிதாபிமானக் கண் கொண்டு பார்க்குமிடத்து மனிதனின் முன்னேற்றத்திற்கு காட்டுகின்ற கவனத்தைவிட பலனை அழிப்பதில் கூடியளவு கவனம் செலுத்தப்படுவதையே காணக்கூடியதாகஇருக்கின்றது இது வரவேற்கக் கூடிய ஒன்றல்ல இந்த நிலையினை தவிர்க்கவே பல நாடுகள் முயற்சிகள் எடுத்துள்ளனவாயினும் இவை எந்த அளவுக்கு வெற்றியளிக்கும் என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. தற்போது மக்களுக்குத் தேவையானது அபிவிருத்தியா அல்லது ஆயுத உற்பத்தியா என்பதனை மக்களே தீர்மானிக்கவேண்டும்.

## இப்படியும் நடக்கிறது

‘சிவதர்ம வள்ளல்’ திரு. க. கனகராசாவின் ஐம்பத்து நான்காம் பிறந்தநாள் நேற்று முன்தினம் பக்தி சிரத்தையுடன் அவரது தொழிலகத்தில் கொண்டாடப்பட்டது. இதில் ஒரு சிறப்பு.

அவரது தொழிற்சாலையில் வேலைபார்க்கும் ஐம்பத்து நான்கு பேருக்கு அறுநூறு ரூபா கொண்ட தேசிய அறக் கொடைத் திட்டச் சான்றிதழ்களை அன்பளிப்பாக வழங்கினர். இந்த வங்கிச் சான்றிதழ் இருபத்தொரு ஆண்டு முதிர்ச்சி கொண்டது. ஒவ்வொரு தொழிலாளியின் குழந்தையும், 21 ஆண்டுகளின் முடிவில் சுமார் நாற்பதினாயிரம் ரூபா சுளையாய்ப் பெற்றுக்கொள்ளும்!

தொழிலாளர்கள் வரலாற்றில் இப்புதிய முன்மாதிரி, புதுமையானது மட்டுமல்ல புரட்சியானதும் கூட!

ஊடுருவி

## யாழ். தாக்குதல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமர் ஆர். பிரேமதாசா, அமைச்சர்கள் ரொனி டி மெல், லலித் அத்துலத் முதலி, ரனில் விக்கிரமசிங்கா, கே. டபிள்யூ தேவநாயகம், சிறில் மத்யூ, நிசங்க விஜயரத்ன பிரதி அமைச்சர்கள் வெரப்பிட்டிய, டொன் பெர்னாண்டோ, அனந்ததிஸ்ஸ டி அல்விஸ் ஆகியோர் இச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

கூட்டணி சார்பில் எதிர்க் கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், திருமலை எம். பி. திரு. சம்பந்தன், திரு நீலன் திருச்செல்வம், யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை தலைவர் திரு எஸ். நடராசா ஆகியோர் கலந்து கொண்டனர். இராணுவத் தளபதி திஸ்ஸ வீரதுங்காவும் சமூகமளித்திருந்தார்.

யாழ். மாவட்டத்திற்கு பட்ட சம்பவங்களுக்கும் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது

தற்போது யாழ் மாநகர சபை எல்லைக்குள் நடந்த சம்பவங்களுக்கு மட்டும் நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனை யாழ். குடாநாடுவரை நடந்த சம்பவங்களுக்கும் நஷ்டஈடு கொடுக்க முடிவு செய்யப்பட்டது. ஆனால் எந்தெந்த திகதிகளில் நடந்த சம்பவங்கள் என்பவை பற்றி முடிவு எடுக்கப்படவில்லை.

### ஊர்காவல்படை

ஊர்காவல்படை அமைப்பது பற்றி ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட ஆலோசனை, இச்சந்திப்பின்போது எடுக்கப்பட்டது. இதற்கான விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்த ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தன ஊர்காவல்படை தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பாதுகாப்பு பிரதி அமைச்சர் திரு. வெரப்பிட்டியாவிடம் பணித்தார்

### கூட்டணித்தலைவர்கள் கருத்துப்பற்றி,..

வெளிநாடுகளில் தமிழர் கூட்டணித்தலைவர்கள் தெரிவித்தகில கருத்துக்கள் பற்றியும், இச்சந்திப்பின்போது பிரஸ்தாபிக்கப்பட்டது. கருத்துக்கள் வெளியிடும்போது மிகவும் கவனமாக இருக்க வேண்டுமெனவும் அமைதியைப் பேணிக்காப்பாற்றும் விதத்தில் கருத்துக்கள் அமைய வேண்டுமென்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அமைதியை நிலைநாட்டும் விதத்தில் சகல கட்சிகளையும் மதத்தலைவர்களையும் கொண்ட கூட்டமொன்றை கொழும்பில் நடத்தவேண்டும் என்று அமைச்சர் நிசங்க விஜயரத்னவின் ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டது. எதிர்வரும் வியாழக்கிழமை இக் கூட்டத்தை நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது. கூட்டம் நடைபெறும் இடம்பற்றி எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் இராணுவத் தாக்குதல் சம்பவங்கள் பற்றி கூட்டணித் தலைவர்கள் எடுத்துக்கூறியபோது, சில சம்பவங்கள் நடந்துள்ளதாக அங்கு சமூகமளித்திருந்த இராணுவத்தளபதி திஸ்ஸா வீரதுங்கா ஏற்றுக்கொண்டார் இதனையிட்டு தாம் கவலைப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்

அப்பாவி பொதுமக்கள் தாக்கப்பட்டு, பலத்த காயமடைந்துள்ளனர் என்றும், கூட்டணித் தலைவர்கள் தெரிவித்தபோது, சம்பவங்கள்பற்றி விசாரணை நடைபெற்று வருவதாகவும் இராணுவத் தளபதி கூறினர்.

யாழ். மாவட்ட சபைத் தலைவர் திரு சு. நடராசா, யாழ் மாவட்டசபையில் எழுந்துள்ள சில பிரச்னைகள் பற்றியும், நிதிநிலமை பற்றியும் எடுத்துக் கூறினர்

பிரதமர் ஒவ்வொரு மாவட்டசபைத் தலைவர்களையும் சந்திக்கவிருப்பதாகவும் அச்சமயம் இப்பிரச்னைகள் பற்றி பேசவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி - கூட்டணித் தலைவர்கள் சந்திப்பைத் தொடர்ந்து ராஜாங்க அமைச்சர் ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ் பத்திரிகையாளர்களுக்கு மேற்கண்ட விபரங்களை தெரிவித்தார். இச்சமயம் திருமலை எம். பி. திரு சம்பந்தனும், திரு. நீலன் திருச்செல்வமும் சமூகமளித்திருந்தனர்.

சர்வதேச கமிஷன் பற்றி வெளிநாட்டு நிருபர் ஒருவர் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்த திருமலை எம். பி. திரு. சம்பந்தன் கூறியதாவது: நாங்கள் சமர்ப்பித்த 5 கோரிக்கைகளில் 4 கோரிக்கைகளை அரசு ஏற்றுக் கொண்டுவிட்டது. யாழ்ப்பாண சம்பவங்களுக்கு பொலிஸாரே காரணம் என்பதை அரசு ஏற்றுக்கொண்டு நஷ்டஈடு வழங்க முன்வந்ததால் 5வது கோரிக்கையான சர்வதேச விசாரணைக் கமிஷன் எவ்வித அர்த்தமும் இல்லாததினால், அதனை தாம் வலியுறுத்தவில்லை, என்றார்

ஜனாதிபதி - கூட்டணி தலைவர்கள் அடுத்த சந்திப்பு டிசம்பர் 9ம் திகதி நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஈ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சின்னக்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள “ஈழநாடு” லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 303-ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு நவம்பர் 4-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது, Registered as a News Paper. The General P. O. Sri Lanka Regd.Q. B. 100236/81, P. O. Box 49. Jaffna. தொலைபேசி 7707, 889, 8126,